FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | கிறிஸ்தவம் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

- **பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி - I

01)

i) பத்துக்கட்டளைகளின் பண்புகள் நான்கு குறிப்பிடுக.

ii) எசாயா இறைவாக்கினர் குறிப்பிடும் மெசியாவின் அடையாளங்கள் நான்கு தருக.

iii) இறையாட்சி பற்றிய முக்கிய மறைஉண்மைகள் நான்கு தருக.

iv) சமநோக்கு நற்செய்திப் பிரச்சினை தொடர்பாக முன்வைக்கப்படும் தீர்வுகள் 4 தருக.

v) இயேசுவின் வேண்டலில் காணப்படும் முக்கிய பகுதிகளில் இரண்டையும், இவ்வேண்டலுக்கும், கர்த்தர் கற்பித்த செபத்திற்குமிடையே காணப்படும் பண்புகளுள் இரண்டையும் குறிப்பிடுக.

02)

i) ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவ எழுத்தாளரை திருச்சபைத் தந்தையர்கள் என அழைக்கப் படுவதற்கான காரணங்கள் நான்கு தருக.

ii) திரிதெந்தின் பொதுச்சங்கத்தின் தீர்மானங்கள் நான்கு தருக.

iii) திரிதெந்தின் பொதுச்சங்கம் முன்வைத்த மறுமலர்ச்சித் திட்டங்கள் நான்கு தருக.

iv) இரண்டாம் மறைத்தூதுப்பயணத்தில் பிலிப்பியில் நடந்த நான்கு நிகழ்வுகளையும், மூன்றாம் மறைத்தூதுப் பயணத்தில் எபேசுவில் நடந்த நான்கு நிகழ்வுகளையும் தருக

v) பவுல் பிலிப்பிய மக்களுக்கு வலியுறுத்தும் தாழ்மை பற்றிய விடயங்கள் 4 தருக.

03)

i) இலங்கையில் போர்த்துக்கேயர் கால கிறிஸ்தவ இலக்கியங்கள் இரண்டையும் ஆங்கிலேயர் காலக்கிறிஸ்தவ இலக்கியங்கள் இரண்டையும் தருக.

ii) போர்த்துக்கேயர் காலத்தில் நிலவிய கல்வி முறைகள் 4 குறிப்பிடுக.

iii) ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய கல்வி விடயங்கள் 4 எழுதுக

iv) ஆங்கிலேயர் காலத்து கல்வி விடயங்கள் 4 குறிப்புக்கள் தருக.

v) ஆங்கிலேயர் காலத்திலும் அதற்குப் பின்னரும் இலங்கையில் பணியாற்றிய நான்கு சித்திரக்கலைஞர்கள் நால்வரைத் தருக.

## பகுதி - II

04)

i) இஸ்ரயேல் நாடு இரண்டாகப் பிளவுபட்டதையும், அதற்கான காரணங்களையும் விளக்குக

ii) திருவிவிலியத்தில் இறைவனால் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை தொடர்பாக ஐந்து கருத்துக்களுடாக விளக்குக

05)

i) பெந்தக்கோஸ்தே தினத்தைத் தொடர்ந்து திருச்சபை வளர்ச்சியடைய ஏதுவான காரணங்கள் ஐந்து தந்து விளக்குக.

ii) திருத்தூதர் கால நற்கருணை வழிபாடு பற்றி விளக்குக

06)

i) கொலோசேயர் 1:5-20 ஆகிய பகுதிகளிலுள்ள கிறிஸ்துவின் தலைமைத்துவம் பற்றிக் குறிப்பிட்டு கிறிஸ்துவிற்கும் முழுப்படைப்பிற்குமிடையிலான உறவினை விளக்குக.

ii) பவுலின் பார்வையில் கிறிஸ்துவிற்கும் திருச்சபைக்குமிடையிலான உறவினை விளக்குக.

07)

i) ஐரோப்பாவில் காணப்பட்ட இரண்டு திருவழிபாட்டு இசை முறைகளைக் குறிப்பிட்டு, அவற்றினை விளக்குக

ii) தேசிய கிறிஸ்தவ இசையின் வளர்ச்சிக்கு யாக்கோமே கொண்சால்வெஸ் அடிகளாரின் பங்களிப்பினை விளக்குக.

08)

i) இலங்கையில் திருச்சபையின் சமூக நலன்புரி நிறுவனங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

ii) இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக திருச்சபை குரல் கொடுத்த சந்தர்ப்பங்களை விளக்குக.

The National e-Learning Portal for The General Education